
The Hindu (English)
Dated: 01.03.2024



# MDMK moves HC for 'top' symbol ahead of LS election

The MDMK has filed a writ petition in the Madras High Court seeking a direction to the Election Commission of India (EC) to allot the 'top' symbol to it, to contest in this year's Lok Sabha election and the 2026 Assembly election in the State. The Second Division Bench of Justices R. Mahadevan and Mohammed Shaffiq have decided to hear the writ petition on Friday. The party's general secretary, Vaiko, had filed an affidavit in support of the petition stating that the party had been allotted the 'top' symbol to contest in four Assembly elections, as well as four general elections since 1996. However, in 2010, the EC de-recognised the party as it had secured only 5.98% of valid votes in the 2006 Assembly election and 3.79% in the 2009 general election, he said. Claiming that the calculation was wrong, Mr. Vaiko said the MDMK had secured 5.99% of votes in the 2006 Assembly election and, hence, this must be construed as 6% of the valid votes.

The Hindu (English)

Dated: 01.03.2024

# CEO holds discussions on deploying Central forces for election duty

CHENNAI: Chief Electoral Officer Satyabrata Sahoo on Thursday chaired a meeting with officials at the Secretariat to discuss the deployment of paramilitary forces for election duty across the State.

Earlier this week, the Union Home Ministry allotted 25 companies of the Central Armed Police Forces to Tamil Nadu for area domination and confidence-building measures, among other purposes.


While 15 companies are expected to be inducted from March 1, ten more would be inducted from March 7.

Dt. Next

Dated: 01.03.2024

# OPS supports NDA, to approach EC for two leaves symbol

**CHENNAI: After his supporters empowered ousted AIADMK leader O Panneerselvam to take call on the alliance for the upcoming Lok Sabha polls, Panneerselvam on Thursday said that they extend "unconditional" support to the National Democratic Alliance (NDA) to ensure Prime Minister Narendra Modi continue his "good governance."**



"We are in the NDA and we will assist the alliance in whatever capacity. We extend unconditional support as we want his 10 years of good governance to continue," said OPS after holding a meeting with his supporters in Chennai.

His supporters have also passed a resolution that they should contest "only in the Two-Leaves" symbol and "never compromise on self-respect" in backdrop of speculations that the BJP leadership has insisted OPS supporters to contest the LS polls in 'Lotus' symbol.

On the possibility of getting the 'Two-Leaves' symbol, OPS's political advisor Panruti S Ramachandran said that the Supreme Court's verdict was subjected to Erode by-poll. It did not have any influence on the original civil suit pending before HC.

Dt.Next
Dated: 01.03.2024


# Vaiko moves HC seeking allocation of 'Top' symbol

**CHENNAI: MDMK general secretary Vaiko approached the Madras High Court seeking to direct the Election Commission (EC) to allocate 'Top' symbol to his party for the ensuing 2024 Parliament election and 2026 Tamil Nadu state Assembly election.**

Vaiko stated in his affidavit that MDMK is contesting in Parliament and state elections since 1996 as a registered-recognised party. Hence, the 'Top' symbol was reserved for MDMK by the EC under the Election Symbols (Reservation and Allotment) Order 1968, said the affidavit.

**Affidavit also sought to direct the EC to rectify derecognition of the MDMK**

Even though the EC de-recognised the MDMK in 2010 the 'Top' symbol was allocated to the party under 10A of the Election Symbols Order 1968, stated the affidavit. Vaiko also claimed that MDMK secured 6 per cent of votes in the 2006 Parliament election, but the EC mentioned it only as 5.98 per cent of votes and de-recognised the party in 2010.



It is pertinent to state that the 'Top' symbol is not a free symbol notified by the EC and no other political parties claim the symbol, said the affidavit. Hence, to ensure and promote fair and free election the EC should allocate the 'Top' symbol to MDMK, to enable the voters to recognise MDMK among other political parties, said the affidavit.

Even though detailed representations were made to the EC seeking to allocate the 'Top' symbol no actions have been taken till now, stated the affidavit. Considering the Parliament election dates may be announced any time, the HC should direct the EC to allocate the 'Top' symbol to us, said the affidavit, seeking to direct the EC to rectify the derecognition of the party.

Daily Thanthi

Dated: 01.03.2024

### நாடாளுமன்ற தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்காக

# தமிழ்நாட்டிற்கு இன்று துணை ராணுவம் வருகை

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, மார்ச்.1-

நாடாளுமன்ற தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்காக தமிழ்நாட்டிற்கு இன்று முதல் துணை ராணுவம் வருகை தர உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு கூறினார்.

### ஆலோசனை கூட்டம்

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதற்கான முன்னேற்பாட்டு பணிகளை தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதசாகு மேற்கொண்டு வருகிறார். இந்த தேர்தலின் போது பாதுகாப்பு பணிகளுக்காக 200 கம்பெனி துணை ராணுவத்தை மத்திய அரசிடம் இருந்து சத்யபிரத சாகு கோரியுள்ளார். முதல்கட்டமாக தமிழகத்திற்கு 25 கம்பெனி துணை ராணுவம், மார்ச் 1-ந்தேதி முதல் வரும் என்று ஏற்கனவே அவர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று தலைமைச்செயலகத்தில் அவர் தலைமையில் போலீஸ் அதிகாரிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் கூடுதல் டி.ஜி.பி.க்கள் மகேஷ் அகர்வால், ஜெயராம், சி.ஐ.எஸ்.எப். ஐ.ஜி.சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர். வரவுள்ள 25 கம்பெனி துணை ராணுவத்தினரை எந்தெந்த மாவட்டங்களில் பணியமர்த்த வேண்டும் என்பது பற்றி இந்த கூட்டத்தில் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டது.

### இன்று முதல்

2 மணிநேரம் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு தலைமைதேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழகத்திற்கு 25 கம்பெனி துணை ராணுவ வீரர்களை இந்திய தேர்தல் கமிஷன் முதல்கட்டமாக ஒதுக்கி உள்ளது. அதில், 15 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் 1-ந்தேதி (இன்று) வருகிறார்கள். மீதமுள்ள 10 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் வரும் 7-ந்தேதி வருகின்றனர்.

இந்த துணை ராணுவ வீரர்களை அனைத்து மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்துவது, அவர்களை ஒருங்கிணைப்பது ஆகிய பணிகள் பற்றி ஆலோசனை மேற்கொண்டோம். அதன்படி, 25 கம்பெனி வீரர்கள் எந்தெந்த பகுதிகளுக்கு அனுப்புவது குறித்து முடிவு செய்துள்ளோம். துணை ராணுவ வீரர்கள் வர வர அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

### பதற்றமான பகுதிகள்

தமிழ்நாட்டில் எந்தெந்த பகுதிகள் பதற்றமானவை என்பது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. அதுகுறித்து ஆய்வுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. தேர்தல் அறிவிப்பு வெளியாகி, வேட்பாளர்கள் நிறுத்தப்பட்ட பிறகு பதற்றமான பகுதிகள் பற்றி மீண்டும் ஆய்வு செய்வோம். தமிழகத்திற்கு வரும் போலீஸ் பார்வையாளர்கள், பொது பார்வையாளர்களின் பரிந்துரையுடன் பதற்றமான பகுதிகள் பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும். ஒரு கம்பெனியில் 90 துணை ராணுவ வீரர்கள் இருந்தாலும், வெவ்வேறு ஆயுதப்படை கம்பெனிகளைப் பொறுத்து வீரர்களின் எண்ணிக்கை மாறும்.

தமிழ்நாட்டுக்கு மொத்தமாக 200 கம்பெனி துணை ராணுவ வீரர்களை தேர்தல் பணிக்காக கேட்டுள்ளோம். அவர்கள் இனிமேல்தான் படிப்படியாக வருவார்கள். அந்தந்த பகுதிகளுக்கு சென்று கொடி அணிவகுப்பு நடத்துவார்கள். சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகள் மற்றும் பதற்றமான பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளை பார்வையிடுவது, பணியமர்த்தப்படும் பகுதிகள் பற்றி நன்றாக தெரிந்துகொள்வது ஆகிய பணிகளில் ஈடுபடுவார்கள்.

தேர்தல் தேதி அறிவிப்புக்கு பிறகு, மீண்டும் நிலைமை கண்காணிக்கப்பட்டு, துணை ராணுவ வீரர்களுக்கு பணி வழங்கப்படும். இப்போதும் வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்த்துக்கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

The paramilitary force arrived in Tamil Nadu for security duties for General Election to Lok Sabha, 2024.

The Hindu (Tamil)

Dated: 01.03.2024

# மதிமுகவுக்கு பம்பரம் சின்னம் கோரிய வழக்கு இன்று விசாரணை

● சென்னை

சென்னை உயர் நீதிமன்றத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளதாவது:

சட்டப்பேரவை, மக்களவை, உள்ளாட்சி தேர்தல்களில் மதிமுக 1996-ம் ஆண்டு முதல் போட்டியிட்டு வருகிறது. இந்த தேர்தல்களில் எங்கள் கட்சிக்கு பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்டது. கடந்த 2006-ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் 5.99 சதவீத வாக்குகள் பெற்ற நிலையில், 5.98 சதவீதம் பெற்றதாக கூறி எங்கள் கட்சியின் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் ரத்து செய்தது. அதன் பிறகு, 2014-ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலில் எங்கள் கட்சிக்கு பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்டது.

எனவே, வரும் மக்களவை தேர்தலிலும் மதிமுகவுக்கு பம்பரம் சின்னம் ஒதுக்க வேண்டும் என்று கோரி தேர்தல் ஆணையத்துக்கு மனு அளித்துள்ளோம். பம்பரம் பொது சின்னம் இல்லை. அந்த சின்னத்தை வேறு எந்த கட்சியும் கோரவில்லை என்பதால் எங்கள் கட்சிக்கே பம்பரம் சின்னத்தை ஒதுக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு இன்று விசாரணைக்கு வர உள்ளது.

MDMK moves High court for 'Top' symbol ahead of Lok Sabha Election. The petition is coming up for hearing today.

Dinamalar

Dated: 01.03.2024

# இரட்டை இலை சின்னத்துக்கு சிக்கல்? தேர்தல் கமிஷனை அணுகும் பன்னீர்!

– நமது நிருபர் –

லோக்சபா தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அ.தி.மு.க.,வின் இரட்டை இலை சின்னத்துக்கு, சிக்கலை ஏற்படுத்த பன்னீர்செல்வம் தரப்பினர் திட்டமிட்டுள்ளனர். இது, பழனிசாமி தரப்பினரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**சாதகம்**

அ.தி.மு.க.,வில் இருந்து நீக்கப்பட்ட, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம், 'அ.தி.மு.க., தொண்டர்கள் உரிமை மீட்பு குழு' ஏற்படுத்தி, தனி அணியாக செயல்பட்டு வருகிறார். அனைத்து மாவட்டத்திற்கும் நிர்வாகிகளை நியமித்துள்ளார்.

பா.ஜ., கூட்டணியில் இருந்து, அ.தி.மு.க., விலகிய நிலையில், அக்கூட்டணியில் இணைந்து, லோக்சபா தேர்தலை சந்திக்க முடிவு செய்துள்ளார்.

அ.தி.மு.க.,வில் இருந்து, அவர் நீக்கப்பட்டதை எதிர்த்து தொடர்ந்த வழக்கில், இதுவரை வெளியான தீர்ப்புகள் அனைத்தும், அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமிக்கு சாதகமாகவே வந்துள்ளன.

தற்போதைய நிலவரப்படி, கட்சி, சின்னம், கொடி ஆகிய அனைத்தும், பழனிசாமி வசம் உள்ளது. கட்சி பெயரை, கொடியை பன்னீர்செல்வம் பயன்படுத்த, நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், லோக்சபா தேர்தலில், இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவோம் என, பன்னீர்செல்வம் கூறி வருவது, அ.தி.மு.க.,வில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அதற்கு வாய்ப்பில்லை என, பழனிசாமி தரப்பு கூறினாலும், இரட்டை இலை சின்னத்துக்கு சிக்கல் வந்துவிடுமோ என்ற அச்சம், கட்சி நிர்வாகிகளிடம் உள்ளது.


தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும், இரட்டை இலை சின்னத்தை, தங்களுக்கு ஒதுக்க வேண்டும் என, பன்னீர்செல்வம் தரப்பு, தேர்தல் கமிஷனில் முறையிட திட்டமிட்டுள்ளது.

அவ்வாறு முறையிடும்போது, தங்களுக்கு சின்னம் கிடைக்கும். இல்லையெனில், சின்னம் முடக்கப்படும் என்பது, அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இது குறித்து, பன்னீர்செல்வம் கூறியதாவது:

இரட்டை இலை தற்காலிகமாக, ஈரோடு சட்டசபை தொகுதி இடைத் தேர்தலுக்கு மட்டும், பழனிசாமி தரப்பிற்கு வழங்கப்பட்டது. நல்ல முடிவு வரும். நாங்கள் உறுதியாக இரட்டை இலை சின்னத்தில் நிற்போம். இதற்காக, உரிய நேரத்தில் தேர்தல் கமிஷனை நாடுவோம்.

இதுவரை, அ.தி.மு.க.,வை உரிமை கோரும் மனுக்கள் மீது வெளிவந்த தீர்ப்புகள் அனைத்தும் தற்காலிகமானவைதான்.



**மூன்றாம் முறை**

பா.ஜ., உடன் எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை. நாடு சுபிட்சமாக இருக்க வேண்டும். அதற்கான காரியங்களை தொண்டர்கள் உரிமை மீட்பு குழு செய்யும். மோடி 10 ஆண்டுகள் பிரதமராக இருந்து, நல்ல திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளார்.

வெளி நாடுகளில் இந்தியாவின் பெருமையை எடுத்து சென்றுள்ளார். எனவே, மூன்றாம் முறை பிரதமராக மோடி வர வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். பா.ஜ., கூட்டணியில் இருக்கிறோம். ஜெயலலிதாவின் நிர்வாகத் திறமை, உலகம் முழுதும் தெரியும். அதை மோடி பாராட்டி உள்ளார்.

நாங்கள் தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் தான் நிற்போம். விருப்ப மனு வாங்கப்பட்டு, வேட்பாளர்கள் நிறுத்தப்படுவர்.

இவ்வாறு கூறினார்.

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறுகையில், ''இரட்டை இலை தொடர்பான வழக்கு, உயர் நீதிமன்றத்தில் சிவில் வழக்காக உள்ளது. தேர்தல் கமிஷனே அதை கூறியுள்ளது. தேர்தல் அறிவிப்பு வரும்போது, தேர்தல் கமிஷன் நல்ல முடிவு எடுக்கும்,'' என்றார்.

Thiru paneer selvam approaches the Election commission of India for Two leaves symbol

Dinakaran, Dated: 01.03.2024

# தேர்தல் விழிப்புணர்வு மிதிவண்டி பேரணி

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, மார்ச் 1: தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு வெளியிட்ட அறிக்கை:

வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம் மூலம் பல்வேறு விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அதன் ஒரு பகுதியாக, நாளை மிதிவண்டி பேரணி அலுவலகம் சார்பாக நடக்கிறது. மெரினா கலங்கரை விளக்கத்தில் இருந்து பல்லாவரம் அலுவலர் குடியிருப்பு வரை 2 மணி நேரம் நடைபெற உள்ளது.

பேரணியை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். பேரணி மூலம், வாக்காளர்கள் தேர்தல் செயல்பாட்டில் பங்கேற்பதன் முக்கியத்துவம் குறித்து அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

As part of creating awareness among the public about General Election to Lok Sabha, 2024 the O/o CEO, TN will conduct cycle rally (cyclothon) on 02.03.2024.